# St. ANTHONY'S COLLEGE
## Kandy



## Primary Section

# Kalai vizha - 2009

# சங்கே முழங்கு



புறப்படு தோழா
புது யுகம் நோக்கி....!

# கலை விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ST. ANTHONY'S COLLEGE
## KANDY

# Junior Tamil Kala Mandram.

welcome you to the

# KALAI VIZHA 2009

## Monday the 25th of May 2009

*Chief Guest*

**S. Thamil Selvan.** (old Anthonian)

**(Asst. Director- Maths, Dept of Education - Kandy.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பாளர்கள்

| | | |
|---|---|---|
| The Principal | :- | **REV. FR. TITUS RODRIGO** |
| Head Mistress | :- | **REV. SR. DULCIE FENANDO** |
| Teacher Incharge | :- | **MR. A.S.M. FELIX** |

## நிர்வாகக்குழு

| | | |
|---|---|---|
| President | :- | **T. VITHYA SAGAR** |
| Vice Presidents | :- | **W.A. SANA**<br>**A.J.M. SAJEED** |
| Secretary | :- | **A.M. FAZRY** |
| Vice Secretary | :- | **M.M.M. AHKAM** |
| Treasurer | :- | **K. RAGURAM** |
| Author | :- | **M.N.M. ALAWI** |
| Sub Authors | :- | **M.R.M. SHAADHIR**<br>**ARSHATH IRSHATH** |
| Auditor | :- | **B. KEVIN**<br>**A.M. ASHAN** |
| Announcers | :- | **S.JENI** (Tamil)<br>**S.M.M. UMAR** (English) |
| Ceromony Organizer | :- | **S.JEHAN CRISTAN**<br>**R. MADHUSHAN** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Message from the Principal

We are in turmoil. There is hardly anybody who would not say that we cannot understand our children. But very few will think why if it is so.

Well, when we were school children we had all the time after school to play and to anything as children. This is a dream for us adults, and even dream for holiday's children as they even cannot ignore as to what it was.


In a world of this nature I am glad that Primary school children have come together to publish a little magazine, a collection of their composition and writings. Thanks to those students and the teachers who guided them. I believe the parents too are happy that their children do not limit their education to the classroom or tuition classes.

We need people who are creative and not machines. . God created man to be a co creator and not just a reproducers or duplicator.

Rev. **Fr. B.K. Titus H. Rodrigo O.S.B. Principal**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1st ROW (Left TO Right)

Miss S.F.Rasi, Mrs. N. pusparani, Miss M.A.U.Fareedha, Mrs. Rev SR Dulcie Fernando (Head Mistress), Rev Fr.Titous Rodrigo (Principle), Mr.A.S.M.Felix (Teacher in Charge), Mr.A.M.S.Hameed, Mrs. Shashikala, Miss H.L.S.Nifara, Miss P.Mangayakkarasi

2nd ROW (Left to Right)

Jehan Crictan (Organizer), S.Jeni (Announcer), A.J.M.Sajeed (Vice President), W.A.Sana (Vice President), T.Vithya Sagar (President), A.M.Fazry(Secretary),M.M.M.Ahkam(Vice Secretary),K.Ragaram (Treasurer),M.n.m.Alawi(Author),M.R.M.Shadhir(Sub Author), R.Madhusan(Organizer),S.M.M.Umair(Announcer),B.kevin(Auditor)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message From Head Mistress

"Culture is forming and reforming" Culture makes a big difference in our life style. We need to learn about our culture, the society and family teaches about our cultural practices. Yet we need to learn from the school about correct values, attitudes, and practices that belong to each culture.

Apart from the other events **Kali Viza** which school give more preference is mainly to develop the Aesthetic and cultural skills of the students. Drama and theater, poems and songs, helps one to build up serenity of mind and sensitivity towards one another.

As it is the 1st attempt that you try to produce a souvenir, I wish all of you all the very best for your efforts. Through your united effort that you may grow in unity and harmony with all the brethren in this beautiful county. That as *St.* Anthony's who itself is a multi cultural society may become an example of unity to our motherland.

Wish you a very successful **Kali Viza!**

Sr. Dulcie Fernando (S.D.S.)
(SLPS II – I, B.A, M.Ed PGDE)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது கல்லூரிக்கு தங்களின் வருகை 1977 வைகாசி மாதம் என அறிந்து பெருமைப்பட்ட நாம் உங்களின் ஓய்வு இவ்வருட வைகாசி மாதமென அறிந்து துயரப்படுகிறோம்.

எமது ஆரம்பப் பிரிவுக்கு
ஆணிவேராக இருந்து
இறை குழந்தைகளாய்
எம்மை கண்காணித்து
எம் வாழ்வு சிறக்க
அரும்பணியாற்றி
இம்மாதத்துடன்
ஓய்வு பெறும்
அன்புக்குரிய
அருட்சகோதரியே,
அன்னையே நீங்கள்
என்றும் நலமுடன்
வாழ வாழ்த்துகிறோம்.

என்றும் மறவாத
தமிழ் இலக்கிய மன்ற
மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி

வருடாவருடம் ஆரம்பப்பிரிவு மாணவர்களால் கொண்டாடப்படுகின்ற தமிழ்கலாச்சாரவிழா மாணவர்களின் கலைச் செழுமையை வெளிப்படுத்தி நிற்பது வழமை. அவ்வாறே இம்முறையும் அமையும் என எதிர்ப்பாக்கிறேன்.

இக்கலைவிழா மேலும் ஒருபடி முன்னேறி இவ் விழாவைத்தொடர்ந்தும் நினைவுபடுத்த கூடியதான ஒரு நினைவாதார நூல் வெளியிட இம்மன்றம் முடிவெடுத்தது வரவேற்கத்தக்கது. அந்தவகையில் சிறுவர்கள் என புறந்தள்ள முடியாதவாறு துணிச்சலுடன் இம்மாணவ செல்வங்கள் "சங்கே முழங்கு" என்ற சிறிய சிறப்பிதழை வெளியிட்டது ஆச்சரியமான ஒன்று. மிகக் குறுகிய நாட்களுள் விளம்பரங்கள் அதிகமின்றி வெளியிடப்படுவது எவ்வளவு சிரமமானது என்பதை அறிவேன். இது போன்ற நூல் ஆரம்பபிரிவு மாணவர்கள் வெளியிடுவது பாராட்டுக்குரியது.


எனது 6ஆம் தர தமிழ்மொழிமூல மாணவர்களின் அயராத உழைப்பு இதன் மூலம் வெளிப்படுகிறது. இம்மாணவர்களின் கன்னி முயற்சி அவர்களின் எதிர்காலத்துக்கு வலுவூட்டும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக இதழாசிரியர் எம். என். எம். அலவி என்ற மாணவனின் துணிச்சல் மிக்க முயற்சி உண்மையில் மெச்சத்தக்கது. அவரோடு இணைந்த செயற்படுகின்ற தமிழ்ச்சங்க நிருவாகிகளான ஏனைய 6ஆம் தர மாணவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். அத்துடன் இதற்கு அனுமதியளித்த வணக்கத்துக்குரிய இக்கல்லூரியின் அதிபர், சங்கைக்குரிய தலைமை ஆசிரியை, ஏனைய சிரேஷ்ட ஆசிரியர்கள் அனைவரின் பூரண ஒத்துழைப்பே இந்த சிறிய நூலென நான் கருதுகிறேன் இதனை மனதார வாழ்த்துவதையிட்டு பெருமையடைகிறேன்.

பொறுப்பாசிரியர்.
A.S.M. Felix



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி அதிபர், அருட்சகோதரி, பொறுப்பு ஆசிரியர் மற்றும் தமிழ் கலாமன்ற மாணவர்கள்



1st Raw (Left to Right)

M.N.M. Alawi (Author) A.J.M. Sajeed, A.S.M. Felix (Teacher in charge) Rev Sr. Dulcie Fernando (Head Mistress) Rev. Fr. Titous Rodrigo (Principle) W.A. Sana, R. Madhusan, M.R.M. Shadir, K. Raguram

2nd Row (Left to Right)

M.M.M. Ahkam, S. Jeni, Arshad Irshath (Sub Author) Jehan Cristan, A.M. Ashan (Auditor) S.M.M. Unar, B.Kevin.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தலைவரின் உள்ளத்தின் துளிகள்

புனித அந்தோனியார் கல்லூரியின் கீழ்ப்பிரிவு மாணவர்களால் வழங்கும் முத்தமிழ் விழாவின் சிறப்பு அம்சமாக முதன் முறையாக சங்கே முழங்கு, வெளிவருகின்றது.

இம் விழாவிலே விழாத் தலைவனாக என்னுரை வழங்குவதிலே பெருமிதமும் உவகையுமடைகின்றேன். எமது கலைவிழாவிலே காலச் சுவடாய் அமையும் இம் மலர வெளியிட ஆர்வமூட்டி, ஆக்கமும், ஊக்கமும் தந்து வழிகாட்டிய எனது கலாமன்ற பொறுப்பாசிரியர் திரு ஏ.எஸ்.எம். பீலிக்ஸ் அவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

அத்துடன் விழா மலரை வெளியிட அனுமதி தந்து ஆசி கூறிய அதிபர் வண பிதா டைடஸ் டொட்ரிகோ அவர்களையும், எமது கீழ்ப்பிரிவு அதிபர் அருட் சகோதரி டல்ஸி பெர்னாண்டோ அவர்களையும், விழா சிறப்புற எம்மை வழிநடத்தி ஊக்கம் தந்த அனைத்து ஆசிரியர்களையும் மிக்க நன்றியுடன் நினைவு கூருவதில் பெருமையடைகின்றேன்.

இம்மலர் வெளிவர அயராது உழைத்த மலராக்கக்குழுவினர்க்கும் குறிப்பாக இதழாசிரியர் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத்தெரிவிக்கிறேன்.

இவ்விழாவின் மகுடமாகும் இந்நூல் காலம் கடந்தும் பேசப்படும் ஆவணமாக இருக்கவும் இந்நூல் தொடர்ந்து மலரவும், இவ்விழா சிறக்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றி

இலக்கிய மன்ற
தலைவர்
தியாகநாதன்
வித்தியாசாகர்,
தரம்:- 6T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliment From**



# S.M.M. Zamani

**[ (old Anthonian) ]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதழாசிரியர் இதயத்திலிருந்து

வருடாந்தம் எமது கல்லூரியின் ஆரம்பப்பிரிவில் கலை விழா கொண்டாடப்படுவது நாம் அறிந்ததே ஆனாலும் அதைச்சிறப்பிக்கக்கூடியதாக இவ்வருடம் "சங்கே முழங்கு" எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வெளியீட்டின் இதழாசிரியராக செயற்படுவதற்கு எனக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது மிகவும் சந்தோஷமான விடயமாகும்.

இவ்வெளியீட்டுக்கு அனுமதி வழங்கிய எமது கல்லூரி அதிபர் வணக்கத்துக்குரிய பிதா டைடஸ் டொட்ரிகோ அவர்களுக்கும், ஆரம்பப்பிரிவு தலைமை ஆசிரியை அருட் சகோதரி டல்ஸி பெர்னாண்டோ அவர்களுக்கும் முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வெளியீட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய பொறுப்பாசிரியர் திரு ஏ.எஸ்.எம் பீலிக்ஸ் அவர்களுக்கும், பல்வேறு உதவிகளை வழங்கிய இவ்வித்தியால ஏனைய ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் இதனை அழகுற டைப் செய்ய உதவிய செல்வி. லரீஸா. முஹம்மட் பௌஸர் அவர்களுக்கும் நூல் வெளிவர பணஉதவியையும், விளம்பரங்களையும் ஆக்கங்களையும் தந்துதவிய சகமாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

"கொங்கு தமிழுக்கு இன்னல் விழைந்தால்.
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு
எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு".

முகமட் அலவி நஸீர்
ஆரம்பப் பிரிவு 6E
இதழாசிரியர்
தமிழ் இலக்கிய மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு விருப்பமான ஆத்திச்சூடி

1 **செய்வன திருந்தச் செய்**
செய்யும் காரியங்களை திருந்தமாக செய்தல் வேண்டும்

2 **செய் எனத்திரியேல்**
சேரத்தக்கவர்களை நன்கு அறிந்து சேர வேண்டும்

3 **தானமது விரும்பு**
ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்

4 **தோற்பன தொடரேல்**
தோல்வி உண்டாகும் என தெரிந்தும் அதில் ஈடுபட கூடாது

5 **தெய்வம் இகழேல்**
கடவுளை இகழ்ச்சியாக பேசக்கூடாது

6 **துன்பத்திற்கு இடம் கொடேல்**
மனம் வருந்தும்படி நடந்துக்கொள்ள கூடாது

7 **தூக்கி வினைசெய்**
எந்த காரியத்தையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்

8 **தொன்மை மறவேல்**
பழமையான காரியங்களை மறந்துவிடக் கூடாது

9 **தேசத்தோடு ஒத்து வாழ்**
தம் நாட்டு மக்களோடு ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும்

10 **தீவினை அகற்று**
பிறருக்குத் தீமை செய்வதை தவிர்க்க வேண்டும்

தொகுப்பு :- M.N.M. Alawi
Grade:- 6E
ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு பிடித்தகொன்றை வேந்தன்

1 **அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.**
**கருத்து** :- அம்மாவும் அப்பாவும் கண்கண்ட கடவுள்.

2 **ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.**
**கருத்து** :- எவருக்கும் உதவாத கருமிகளின் பொருள்களை தீயவர்கள் வந்து கொள்ளை அடித்துக் கொண்டு போய் விடுவார்கள்.

3 **எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.**
**கருத்து** :- கணக்கும் இலக்கியமும் கண்களைப் போல சிறப்பானவை.

4 **ஏவா மக்கள் மூவா மருந்து.**
**கருத்து** :- பெற்றோர்கள் சொல்லு முன்பே, குறிப்பை உணர்ந்து செய்யும் பிள்ளலின் அமுதத்துக்கு இணையானவர்கள்.

5 **ஐயம் புகினும் செய்வன செய்.**
**கருத்து** :- வறுமையால் பிச்சை எடுக்க நேர்ந்த போதிலும் செய்ய வேண்டிய நல்ல காரியத்தை செய்யாமல் விட்டு விடக் கூடாது.

6 **ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.**
**கருத்து** :- பொறாமை எண்ணத்தோடு பேசுவது செல்வத்தை அழித்து விடும்.

7 **கிட்டதாயின் வெட்டென மற.**
**கருத்து** :- ஆசைப்பட்டது கிடைக்காவிடில் அதை உடனே மறந்து விடுவது சிறப்பு.

8 **குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.**
**கருத்து** :- குற்றம் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்தால் சுற்றத்தார்ரென யாருமே இருக்கமாட்டார்.

தொகுப்பு :- பி.ஆர். அவிநாஸ்
தரம் :- 6 (T)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்ததில் என்னை சிந்திக்க வைத்தது

பணமுடைமானிடா
நீ ஏழைகள் ஆயிரம்
பேருக்கு எஜமானாக
இருக்கலாம்
ஈ எறும்பு
ஒன்றுக்காவது எஜமானாக
முடியுமா?

உன் பத்து ரூபாய்
நோட்டுக்கு பத்துப்பேர்
வரவாம். பத்தாயிரம்
நீட்டு, பட்டாம் பூச்சி வருமா?

உட்கார்ந்திருப்பது உன்
தோட்டத்துப் பூவில்
என்றாலும், உன்
வருகையைக் கண்டு
வண்டு எழுந்திருக்குமா?

நீ ஒரு தேன் கூட்டைத்
தொடு, நீ செல்வனாயிற்றே
என்று ஒரு தேனியாவது உன்னை
முத்தமிட்டு பறக்குமா இல்லையே?

நீயும் உன் பணமும் பெறுவது நிலையான வெற்றியுமல்ல
ஏழைகள் பெறுவது நிலையான
தோல்வியும் அல்ல.
கல்வியால் ஒருவன் பெறும் வெற்றியே – வெற்றி
நாடும் நலமுறும்.
அவனுள்ளும் சாந்தி பெருகும்.

T. ஜயபவன்
தரம்- 5D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாட நூலில் இருந்து

1 "நன்றி ஒருவருக்கு செய்தக்கால் அந் நன்றி என்று தருங்கொல் என வேண்டா நின்று தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்."

கருத்து:- தென்னை மரத்து அடியிலே நீர் பாய்கின்றோம். அது சுவையிடைய இள நீராக மேலே காய்கிறது. அது போல நற்குணமுள்ள ஒருவருக்கு நன்மை செய்தால் நமக்கு நன்மையில் உண்டாகும். பதிலுக்கு உதவியை எதிர் பார்த்து எதையும் செய்யக் கூடாது.

2. "அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா தொடுத்த உருவத்தால் நீண்ட பழ மரம் எல்லாம் பருவத்தால் அன்றிப் பழா"

கருத்து:- நீண்ட உயர்ந்த மரங்கள் ஆனாலும் தகுந்த பருவத்தாலதிலதான் பழங்களை அளிக்கும் என்னதான் அடிக்கடி முயன்ற போதிலும். மேற்கொண்ட காரியங்கள் ஆகும் காலத்தின்தான் கைகூடும்.

3. மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம் உடல் சிறியர் என்று இருக்க வேண்டா கடல் பெரிது மண்ணிரும் ஆகாது அதன அருகே சிற்றூரல் உண்ணீரும் ஆகிவிடும்.

கருத்து:- எதையும் நாங்கள் சிறியதென்றோ அல்லது எவரையும் நாங்கள் சிறியோர் என்றோ ஒதுக்குவது நல்லதல்ல ஏன் என்றால் அவர்களும் அவசரத்துக்கு உதவுவர்.

4. அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைபோல் உற்றூளித்தீர்வார் உறவு அல்லர் அக்குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்திலும் போலவே ஒட்டி உறவார் உறவு

கருத்து:- வால்விலும் தாழ்விலும் நீங்காமல் சேர்ந்து இருப்பவரே உறவினர் ஆவார்.

தொகுப்பு
நிதர்சன்
தரம்:- 6T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரச்சிலுவை

தொட்டதெல்லாம் பொன்னாகும் வள்ளலிடம் சென்று ஒரு தொழு நோய்க்காரன்
விட்டெறிந்த பணம் போல இயேசு பிரான் கைகளிலே வீரரெல்லாம்
எட்டுப்பேர் சுமக்கின்ற பெருஞ்சிலுவை தன்னயாங்கே எடுத்து வைத்தார்!
கட்டளை போல் பெருவானம் கலக்கமுற ஓருமின்னல் கண்டதம்மா!

நல்லவருக்கு மழைபொழியம் நாய்களெனில் நிலங்காயும் நன்மை இல்லாத
கல்மனத்தார் நடந்து சென்றால் முள்ளாக மாறிவிடும் கடலில் பஞ்சும்!
சொல்லறியா இயேசுபிரான் தோள்களிலே சிலுவையினைச் சுமந்தபோது
கொல்லவரும் பாம்புகளும் புலிகளுமே பெருங்கண்ணீர் கொட்டிற்றம்மா

வானகமும் வையகமும் கூடுவதைக் குறிப்பதுபோல் சிலுவை வைத்து
மானமெனும் ஓர் பண்பை மனிதகுலம் காண்பதற்கு மனது வைத்து
தானமொடும் தவம்பெருக முள்ளாலே மகுடமதைத் தலையில் வைத்து
ஞான மகன் நின்றவுடன் ஞானமெலாம் ஓர்பொழுது நடுங்கிற்றம்மா?

அவமானம் மிக்கவர்கள் அவர்மானம் தனைப்பறிக்க அவரின் தோழில்
அவமானச் சின்னமதை அணைத்தேற்றிவைத்தார்கள் ஆனபோதும்
புவிமானம் காப்பதற்கு சிலுவைதனை முத்தமிட்டுப் புனித அண்ணல்
உவமானவாகவரும் எதிர்காலத் தனை எண்ணி உடன்சுமந்தார்!

எத்தனையோ பாவிகளின் பாவத்தைத் ஏற்றுக்கொள்ள ஏற்றுக்கொள்ள
உத்தமனார் சிலுவையினை உடல் வைத்து அதன்மீது உள்ளம் வைத்தார்!
கத்திமுனை பின்தொடரப் புத்தியுள்ளோர் கண்கலங்கக் கால்நடந்து
சத்தியத்தின் திருக்குமரன் தள்ளாடும் உடலோடும் கவழ்ந்து சென்றார்!

வேதமகன் தாளமல் பூமியிலே மூன்றுமுறை வீழ்ந்து வீழ்ந்து
சோதனையைப் பொறுத்தாலும் சுமக்கும் உடல் பொறுக்கவில்லை சோர்ந்து சோர்ந்து
நாதனையே மனத்தெண்ணி நாட்டாரைக் காப்பாற்ற நடந்து சென்றார்.
போதனையைச்சொன்னவர்க்கு சோதனையும் வேதனையும் பொறுமைதானே!

தொகுப்பு :- யேசுகாவியம்
எழுதுபவர்:- Grade 6T S. ஜெனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர் மொழிக்கு ஒரு சொல்

1. யார் துணையுமின்றி தானே தனிநின்று பகைவரை வெல்லும் திறன் படைத்தோன்.
   - ❖ அசகாயசூரன்
2. அறிஞர்கள் கூடிவாதிடும் இடம்
   - ❖ பட்டிமன்றம்
3. நூலின் தொடக்கத்தில் அந்நூலை அறிமுகப்படுத்தி எழுதும் உரை
   - ❖ முன்னுரை
4. ஒன்று போல் இருக்கும் வேறொன்று
   - ❖ போலி
5. கற்பனையாகவும் அலங்கரித்தும் கூறும் உரை
   - ❖ புனைந்துரை
6. நிகழ்ச்சியொன்றை மேடையேற்றுவதற்கு முன்பு நடத்திப்பார்ப்பது
   - ❖ ஒத்திகை
7. இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
   - ❖ வெள்ளிவிழா
8. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
   - ❖ பொன்விழா
9. அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
   - ❖ வைரவிழா
10. எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
    - ❖ பவளவிழா
11. நூறாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
    - ❖ நூற்றாண்டு விழா
12. ஒருநாட்டுக்கு வெளியில் இருந்து உணவு முதலிய எவ்வகைப் பொருளும் கிடையாதவாறு தடுத்து அந்நாட்டைப் படை கொண்டு நாற்புறமும் சூழ்ந்து நிற்றல்.
    - ❖ முற்றுகை
13. நிகழ்ச்சியொன்றை பலர் அறிய முதன்முதலாக மேடையேற்றுவது
    - ❖ அரங்கேற்றம்
14. புதிதாக செய்த தேர், கப்பல் போன்றவற்றை முதன்முதலாகப் பலர் அறிய இயக்குதல்
    - ❖ வெள்ளோட்டம்
15. நூலொன்றுக்கு நூலாசிரியரல்லாத வேறொருவரால் எழுதப்படும் உரை
    - ❖ அணிந்துரை

தொகுப்பு:- M.R.M. Shaadhir



6T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகத்தைக் காப்பதெப்படி?

1 புத்தகத்தை அதிகமாகப் பிரிக்காதீர்.

2 பிரித்தபடியே கவிழ்த்து வைக்காதீர்.

3 மூலைகளை மடிக்காதீர்.

4 தூக்கம் வரும்போது எடுத்துவைக்க மறவாதீர்.

5 தலையணையாக வைத்துக் கொள்ளாதீர்.

6 வைக்கும்போதும் கொடுக்கும்போதும் வீசி யெறியாதீர்.

7 ஆளின் மீதோ பூமியிலோ அடிக்காதீர்.

8 குழந்தைகளிடம் கொடாதீர்.

9 குறிப்புக்களும் கோடுகளும் எழுதாதீர்.

10 எண்ணெய், தண்ணீர் பட்ட கைகளோடு தொடாதீர்.

M.M. Ahkam
Grade:- 6T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் எழுத்துள் மனிதனின் குணங்கள்

அன்பின் வடிவம் தான் மனிதன்

ஆசையை அடக்கியவன் மனிதன்

இன்பத்தின் உருவே மனிதன்

ஈகையின், நினைவே மனிதன்

உண்மையைச் சொல்பவன் மனிதன்

ஊக்கம் கொண்டவன் மனிதன்

எளிய உருவினன் மனிதன்

ஏழ்மையை வெல்பவன் மனிதன்

ஐராவதம் போன்றவன் மனிதன்

ஒற்றுமைக் காப்பவன் மனிதன்

ஓருயிர் ஈருடல் மனிதன்

அஃறிணை அல்லவே மனிதன்

மனிதன் மனிதன் மனித

மாண்பினைக் காப்பவன் மனிதன்

கே. ரகுராம்
Grade:- 6T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தரை ஜாதி உண்டு

பகலும் இரவும்

காலத்தின் சாதிகள்

கண்ணீரும் சிரிப்பும்

மானிடத்தின் சாதிகள்

அன்பும் வெறுப்பும்

உணர்வின் சாதிகள் இப்படி

நல்லது கெட்டது

உயிரின் சாதிகள் இப்படி

ஔவைப் பாட்டி

சரியாய் சொன்னார்

சாதி இரண்டென்று

T. தர்சன்

Grade:- 5D

## சமாதானம்

ஆண்டு, பல ஆயுதம் ஏந்தி
நீண்ட போர் செய்த நிலை மாறி
இன வெறி, மத வெறி அடங்கி
இன்சொல்லால் புது உலகைத் தோற்றிடுவாய்

சொந்த மண்ணில் சோதனைகள்
இந்த வேதனைகள் இனி வேண்டாம்
சொந்த பந்தம் சேர்ந்து சுதந்திரமாய்
நிம்மதியாய் வாழும் வரம் வேண்டி நீ வந்திடுவாய்

எம். எப். இமாட்
தரம்:- 4D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹாகவியின் "புதியதொருவீடு" என்ற நாடகத்திலுள்ள கடலை நம்பி என்ற பாடல்

1. சிறுநண்டு மணல் மீது படமொன்று கீறும்
சிலவேளை இதை வந்து கடல் கொண்டு போகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட பயமொண்று காணும் .....ஏலை......
............ ஏலோ தத்தையா ஏலை ஏலோ

2. வெறுவான வெளிமீது மழை வந்து சீறும்
வெறி கொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்
நெறிமாறுபடநூறு சுழிவந்து சூழும்
நிலையான தரை நீரில் இலைபோல் ஈடாடும் (ஏலை ஏலோ)

3. கோடை கொடும்பனி மழைகுளிரை அஞ்சிக்
கோடிப் புறத்தினில் உறங்கி விடலாமோ
ஆடைகளைந்து தலைமீதினில் அணிந்தோம்
ஆழக்கடல் தயிர் எனக் கடைய வந்தோம் (ஏலை ஏலோ)

வாடை குளிர்ந்த தெனில் வாடி விடலாமோ
வாரும் கடல் முழுதும் ஓடி வலை வீச
பாடொன் நிரண்டகல முன் பகலும் ஆகும்
பாரும் கிழக்கிலொரு வெள்ளி ஒளி வீசும் (ஏலை ஏலோ)

By:- A.M. Ashan
Grade:- 6E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரதனின் பெருந்தன்மை

இராமன் நாடு திரும்ப வேண்டும். அவனே அயோத்தியிலிருந்து அரசு செலுத்த வேண்டும் என்ற உறுதியான கொள்கையுடையவன் பரதன்.

இதனாலேயே அவனை நாடு திரும்புமாறு பரதன் பலமுறையும் பணிந்து வேண்டினான். ஆனால் இராமனோ தந்தையின் சொல் காக்கும் உறுதியுடையவனாய், பதினான்கு ஆண்டுகள் காட்டு வாழ்கை முடித்தே திரும்புவேன் என உறுதிபட உரைத்து விட்டான். பரதனின் வேண்டுகோள் பயன் தராத நிலையில் இராமனின் கட்டளையை ஏற்கிறான் பரதன். பதினான்கு ஆண்டுகள் கழிந்ததும் இராச்சியத்தை ஏற்காவிடின் மறுநாளே தான் தீயில் வீழ்ந்து இறப்பது உறுதி என்று இராமன் மேல் ஆணையிடுகிறான் பரதன். இவை எல்லாம் பரதனின் தூய உள்ளத்தையே எடுத்து காட்டுகின்றன. ஈற்றில் இராமனின் இரு திருவடிநிலைகளை (பாது கைகளை) வேண்டிப் பெற்று அவற்றை தன் கிரீடமெனத் தலைமேற் சூடிக்கொண்டு அழுத கண்ணினாய் அயோத்தி நோக்கி புறப்பட்டான். அவன் அயோத்தி மாநகரினுள் நுழையாது நந்திக் கிராமம் எனுமிடத்தில் இராமனது திருவடிகளைக் சிம்மாசனத்தில் வைத்து, ஐம்பொறிகளையும் அடக்கி அங்கிருந்து ஆட்சி செலுத்தினான். இச்செயல் இராமன் மீது பரதன் கொண்ட பாசத்தையும், அவனது உள உறுதியையும் வெளிக்காட்டுகின்றது.

சுருங்கக் , கூறின் அரச செல்வங்களைப் பொருட்படுத்தாது தன் தமையன் இருக்குமிடம் நாடிச் சென்று அவனை மீள அழைத்து வரப் பரதன் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் அவனது தூய உள்ளத்தையம், அறம் வழுவாகக் குணவியல்புகளையும் வெளிப்படுத்துவனாகவே விளங்குகின்றன. இதனாலேயே பரதன் குணத்தால் உயர்ந்து இராமனையும் மேலாக நிற்பதை காணமுடிகிறது. இதிலிருந்து உரியவருக்கு உரிய இடம் கொடுப்பதே சால்பு என அறிகிறோம்.

By:- Kevin Dhnajan
Grade:- 6E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் பொக்கிஷம்

| | |
|---|---|
| மிகவும் மதிப்புக்குரியோர் | – தாய், தந்தை |
| மிகப் பெரிய வெகுமதி | – மன்னிப்பு |
| மிகப் பெரிய தேவை | – நம்பிக்கை |
| மிகவும் கொடிய நோய் | – பேராசை |
| கீழ்த்தரமான விடயம் | - பொறாமை |
| ஆபத்தை விளைவிப்பது | - அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | - நம்பிக்கைத்துரோகம் |
| உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| பிரியக் கூடாதது | - நட்பு |
| மிக மிக நல்ல நாள் | - இன்று |
| மிகவும் வேண்டியது | - பணிவு |
| மிகவும் வேண்டாதது | - வெறுப்பு |
| மிகவும் சுலபமானது | - குற்றங்காணல் |
| நம்பக் கூடாதது | - வதந்தி |
| செய்யக் கூடியது | - உதவி |
| விலக்க வேண்டியது | - சோம்பேறித்தனம் |
| நழுவ விடக் கூடாதது | - வாய்ப்பு |
| மறக்கக் கூடாதது | - நன்றி |

அர்ஷத்
Grade:- 6E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு முட்டாள்கள்

ஒரு நாள் காட்டு வழியில் நான்கு இளைஞர்கள் தற்செயலாகச் சந்தித்துக் கொண்டனர். ஒவ்வொருவனும் தன்னைப்பற்றி அறிமுகம் செய்து கொண்டனர்.

முதலாம் இளைஞன், "ஏதேனும் ஓர் எலும்பு கிடைத்தால் கூட அந்த விலங்கின் முழுஎலும்புக் கூட்டை என்னால் உருவாக்கித் தர முடியும்" எனப் பெருமையாகச் சொன்னான்.

"அந்த எலும்புக் கூட்டின் மேல் என்னால் முழுத் தசையையும் உருவாக்க முடியும்" என்று தன் ஆற்றலைச் சொன்னான் இரண்டாமவன்.

இதைகேட்ட மூன்றாமவன் "என்னால் அதன் தோல், முடி, நகம் போன்றவற்றை உருவாக்க முடியும்" என்றான்.

நான்காமவனோ "இப்படி நீங்கள் உருவாக்கும் விலங்கிற்கு என்னால் உயிர் கொடுக்க முடியும்" என்றான்.

அவர்கள் நால்வரும் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்த விரும்பினார்கள். அப்போது அருகில் ஓர் எலும்பு கிடப்பதைக் கண்டார்கள்.

உடனே முதலாமவன் அந்த எலும்பைக் கொண்டு முழு எழும்பும் கூட்டையும் உருவாக்கினான்

இரண்டாமவன் அதற்க்குத் தசையைக் கொடுத்தான்.

மூன்றாமவனோ தோல்,முடி போன்றவற்றை உருவாக்கினான் அங்கே உயிர் அற்ற புலியின் உடல் கிடந்தது.

நான்காமவன் அதற்கு உயிர் கொடுத்தான். உயிர் பெற்ற புலி நால்வரையும் கொன்று தின்றது நால்வரில் யார் பெரிய முட்டாள்? ஏன்?

விடை:-
நான்கு பேரும் முட்டாள்கள் தான், ஆனால் முதல் மூன்று முட்டாள்களின் செயலினால் யாருக்கம் எந்த தீங்கும் இல்லை. ஆனால் புலியின் உடல் உருவாகி உள்ளது என்று தெரிந்தும் அதற்கு உயிர் கொடுத்த நான்காமவனே மிகப் பெரிய முட்டாள். அதனாற்றான் நால்வரையுமே புலி கொன்று தின்றது.

"ஒருவனின் குணமறிந்து நண்பனாக்கு"

By Wahid ahamed Sana
Grade: 6T



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது மூத்தோர் மொழிந்த முதுமொழி. கல்வியின் அருமையை உணர்ந்து நாம் கற்க வேண்டும் உலகில் இன்று கல்வியறிவு இல்லாதவன் கால் தூசிற்கு சமனானவன் நாம் இளைய வயதில் கற்கும் கல்வியறிவு எம்மை வாழ்வில் உயர்த்தும்.

"மன்னனுக்கு தன் தேச மல்லாற் சிறப்பில்லை, ஆனால் கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பது ஔவைவாக்கு இதன் கருத்து ஒரு மன்னனுக்குத் தன் தேசத்தை விட்டு வெளியே சென்றால் அவனுக்கு மதிப்பில்லை ஆனால் ஒரு அறிஞனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

கற்றவனே முகத்தில் இரண்டு கண்ணுடையனவனாக கருதப்படுகிறான். கல்லாதவன் முகத்தில் இரண்டு புண்ணுடையவனாகவே கருதப்படுகிறான். இன்று உலகம் கல்வி அறிவை வளர்க்க முயல்கிறது. கல்வியானது இருவகைப்படுகிறது. ஒன்று ஏட்டுக்கல்வி மற்றையது அனுபவக் கல்வி. இவை இரண்டும் எமது வாழ்வில் இன்றியமையாதவை ஆகும்.

ஏட்டுக் கல்வியானது நாம் பாடசாலைக்கு சென்று கற்பதாகும். இவை மொழி மற்றும் பல உலக நடத்தைக்கு தேவையான அறிவாகும். ஆகவே நாம் அதனை சிறு வயது தொடக்கம் கற்றல் அவசியமாகும்.

"கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்பது வள்ளுவன் வாக்கு. எனவே அக்கல்வியை நாம் எம் வாழ்க்கையில் முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்லக் கூடியதாக அமைக்க வேண்டும். அவ்வகையில் கல்வியின் பெறுமையை அனைவரும் உனர்ந்து கொள்வாமாயின் எல்லோரும மகிழ்வாய் வாழக் கிடைக்கும்.

வணக்கம்!

P.மதூஷன்
Grade:- 4D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை நாடு

1. இலங்கை நாடு எம் நாடு.

2. இங்கு தேயிலை, தென்னை, இறப்பர், கொக்கோ பயிரிடப்படுகின்றன.

3. இலங்கை நாட்டில் சிங்களம், தமிழ் ஆங்கிலம் போன்ற மொழிகள் பேசப்படுகின்றன.

4. எமது நாடு இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்டுள்ளது.

5. எமது நாட்டின் தலை நகரம் ஶ்ரீ ஜயவர்தனபுர கோட்டை ஆகும்.

6. இலங்கையில் மிக அழகான நீர்வீழ்ச்சிகள் காணப்படுகின்றன.

7. இலங்கையின் மிக நீளமான ஆறு மகாவலி கங்கை ஆகும்.

8. இலங்கையில் பெறுமதியான இரத்தினக்கற்கள் காணப்படுகின்றன.

9. இலங்கையில் மிக உயரமான மலைகள் காணப்படுகின்றன.

10. எமது இலங்கையின் தேசிய கொடியில் வாளேந்திய சிங்கம் காணப்படுகின்றது.

அஹ்மத் உஸாமா
Grade:- 3D

## சிறுவர் நாம்

ஆடுவோம் பாடுவோம்
ஒற்றுமையாகக் கூடி விளையாடுவோம்
சிறுவர் நாம்

சிறகடித்துப் பறப்போம்
சின்னச் சின்னச் சிட்டுகளாய்
சிறுவர் நாம்

ஒற்றுமை எனும் கயிற்றினால்
கட்டி எழுப்புவோம்
நாளைய உலகை

F. முஹம்மது அர்ஷத்
Grade:- 4D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது வகுப்பாசிரியர்

எனது வகுப்பாசிரியரின் பெயர் மங்கையர்கரசி.

வகுப்பாசிரியர் எனக்கு பாடம் படித்துத் தருவார்.

எனது வகுப்பாசிரியர் என்னுடன் அன்பாக இருப்பார்.

எனது ஆசிரியர் நல்ல பழக்க வழக்கங்களை சொல்லித்தருவார்.

எனது ஆசிரியர்கள் எம்மை நல் வழியில் நடாத்துவர்.

F.M. இபாம்.
Grade:-2D

## பசு

பசு புல் மேயும்.

பசு பால் தரும்.

பசுவை வீட்டில் வளர்ப்பார்கள்.

பசு சாதுவான மிருகம்.

பசு மிகவும் அழகானது.

M.J.M. இன்திஷாம்
தரம்:- 2D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்க்கான நல்வழி

தமிழ் நல்வழி நூல்கள் இயற்றிய புலவர்களுன் ஔவையாரும் ஒருவர். அவர் நமக்கு இசைபட வாழும் வழி சொல்லியுள்ளார். ஔவைப் பாட்டி நாம் செய்யக்கூடியவைகளை தெளிவாக கூறியுள்ளார்.

நாம் செய்யக்கூடிய நற்கருமங்களில் முதன்மையானதாக இருப்பது தருமத்தை செய்வதாகும். எனவே அவர் "அறஞ்செய விரும்பு" என்றார். அவர் தீராக் கோபம் போராய் முடியுமென்பதால் "ஆறுவது சினம்" என்றார். கோபத்தினை அடக்குமாறு அறிவுரை கூறுகிறார். "ஐயம் இட்டுண்" என்று இரப்போருக்கு முதலில் உணவளித்த பின்னரே உணவு உண்க என்றார். உலகநடத்தை, நடைமுறைகளுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ள வேண்டுமென்று கூறியுள்ளார். "ஙப்போல் வளை" சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வரும் வழக்கமில்லாத ஙகரம் ஏனைய எழுத்துக்களுடன் கூடி சொல்லாக்கத்தில் இடம்பெறுவது போல பிறரை அணைத்து நன்மையை அடைய வேண்டும். என்கிறார். "ஞயம்பட உரை" என பிறர் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தகூடியதாக இனிய வார்த்தைகளையே பேசுதல் வேண்டும் என்று கூறியுள்ளார்.

"தந்தை தாய் பேண்" என்றார். "பருவத்தே பயிர் செய்" என்று உரியகாலத்தில் செய்ய வேண்டிய கடமைகளை செய்யுமாறு சொல்லியுள்ளார். "இளமையில் கல்" என்ற அவர் "கீழ்மை அகற்று" என்று தீயவருடன் சேராது இருக்குமாறு கூறுகிறார். "குணமது கைவிடேல்" என்பதும் "கெடுப்பது ஒழி" என்றும் கூறிய அவர், "கேள்வி முயில்" என்றும் கற்றுணர்ந்த பெரியோர் சொல்லும் நல்லுரைகளை கேட்டு அதனபடி நடக்க முயலவேண்டும் என்றார். தெரிந்த வித்தைகளை மறைக்காமல் பிறருக்கு கற்று கொடுக்க வேண்டும் எனும் பொருளில் "கைவினை கரவேல்" என்றார். அதுமட்டுமல்லாது சன்றோர் எனத்திரு என்றும்ட "சேரிடம் அறிந்து சேர்" என்றும் "தக்கோன் எனத் திரி" என்றும் கூறியுள்ளார். இவ்வாறு இப்பூவுலகில் சிறந்த பிரஜையாக ஒழுகுதல் வேண்டும் என கூறிவைத்துள்ளார்.

எனவே ஔவையார் முதுமொழிப்பிரகாரம் கிழமைபட வாழ நாமெல்லாம் முயற்சி செய்வோமாக.

செல்வன் மகேஸ்வரன் மதுஷான்
Grade : 3D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானம் பார்.

சூரியன் உதிக்கும் திசையைப் பார்
சூழ உள்ள அழகைப் பார்
பகலில் நீல வானம் பார்
பஞ்சுப் போன்ற முகிலைப் பார்.

வண்ண வண்ண நிறங்கள் பார்
வான வில்லின் அழகைப் பார்
இரவில் தோன்றும் நிலாவைப் பார்
இருளில் மின்னும் உடுவைப் பார்.

S. சதுர்ஷன்
தரம்:- 4D

## நான் ஒரு வண்ணத்துப் பூச்சியானால்

நான் ஒரு வண்ணாத்திப் பூச்சியானால் விரும்பிய இடமெல்லாம் உல்லாசமாகப் பறந்து திரிவேன்.

அழகான பூந்தோட்டங்களுக்குச் சென்று விரும்பிய பூவில் எல்லாம் தேன் குடிப்பேன்.

எனது தோழர்களுடன் ஒன்றாகச் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்வேன்.

பூக்களில் அமர்ந்து படி தென்றல் காற்றில் ஊஞ்சலாடுவேன்.

என்னைப் பிடிக்க வரும் சிறுவர்களை ஏமாற்றுவேன்.

என் அழகிய சிறகுகளினால் காண்போரை மகிழ்விப்பேன்.

M.R.M. Umer
Grade:- 3D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

தமிழ் மொழி நம் தாய் மொழி
தமிழ் மொழிக்கு ஈடுஇணையுண்டோ
எதுகையைக் கேளுங்கள்!
மோனையைக் கேளுங்கள்.

என்னென்ன அழகெல்லாமுண்டு
இணைமொழிகளையும், பழமொழிகளையும்.
அடைமொழிகளையும் அழகுறக் கூறுவது
எம் தமிழே.

புலவர்களும், கவிஞர்களும் போற்றும்
மொழியும் எம் தமிழ் மொழியே
புதுமைகள் பல படைத்திட
புறப்பட்டது எம் புரட்சி மொழியே

சொல்லவா வேண்டும் எம்தமிழ்
இலக்கண, இலக்கிய அழகுகளை
பாமரர் முதல் பண்டிதர் வரை
அறியும் இலகு தமிழ்

வாழ்க எம் மொழி
வாழ்க வண்ணத்தமிழ்
வளர்க இசைத்தமிழ்
பரவுக உலகமெல்லாம்

நன்றி!

V.Hanham Shayan
Grade: - 4D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்களால் ஏற்படும் நன்மைகள்

மரங்கள் இருப்பதால் எமக்கு பல நன்மைகள் உண்டு. அந்த நன்மைகளை இரண்டு வகையாகக் கூறலாம். ஒன்று உயிருடன் நிற்கும் மரங்களால் ஏற்படும் நன்மைகள் மற்றது மரங்களை வெட்டியபின் அவற்றால் ஏற்படும் நன்மைகள்.

உயிருடன் நிற்கும் மரங்களால் ஏற்படும் நன்மைகள் ஆவன: மரங்கள் பழங்களைத் தருகிறன. தானியம், கிழங்கு என்பவற்றை தருகிறன. இவற்றுள் சிலவற்றை வேக வைத்தும் பச்சையாகவும் உண்கிறோம். இவற்றில் இலை, குழை, சருகு விவசாயத்துக்கு பசளையாக உதவுகின்றன. மண்ணரிப்பு ஏற்படாது மழையின் வேகத்தை குறைக்கிறது அத்துடன் மரங்களின், வேர்களும் மண்ணரிப்பை தடுக்கிறன. அவை மண்ணைப் பற்றிப் பிடித்து கொண்டிருக்கின்றன. மரங்கள் உயர்ந்து வளர்வதால் மேகக் கூட்டத்தை தடுத்து மழை பெய்யச் செய்ய உதவுகின்றன.

மரங்களில் இருந்து வீடு கட்ட பயன்படும் பலகைகளும், யூக்கலிப்ரஸ் மரத்தில் இருந்து கடதாசி செய்யவும் பயன்படுத்துகின்றன. எனவே இவ்வாறு மரங்கள் பெரும் பயன் அளிப்பதால் நாமும் மரம் வளர்ப்பதில் முன்னின்று செயற்படுதல் வேண்டும். இதனாலேயே அரசாங்கமும் முக்கிய தினங்களில் மரம் நடுவதற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

M.K. Musharf
Grade: - 3D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகமும் சோழரும்

நம் பாரக தேசத்ததில், வடக்கில் வேங்கடமும் தெற்கில் குமரியும் கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் எல்லைகளாகவுடைய தென் கோடிப் பகுதியில் தமிழ் மொழி வழங்குகின்றது. அதனால், இதனேத் தமிழ்கூறும் நல்லுலகம், தமிழகம் என்று முன்னோர்கள் வழங்குகின்றனர். அந்நிலப்பகுதி வடக்கே பெரும் பாலும் வடமொழி காணப்பட்மையால் அதனின்றும் வேறுபாடு அறிய இந்நிலத்து மொழி தென் மொழி என்று வழங்கப்பட்டது. இத் தமிழகத்தை அநாதிகாலமாக ஆண்டுவந்த அரசர்கள் சேரர், சோழர், பாண்டியர் என்று மூவேந்தர்கள் ஆவர். இம்மூவருடைய ஆட்சிக்கு உட்பட்ட தேசங்கள். தலைகீழான ஆய்த வெழுத்துவடிவில் ( ) மூன்று மண்டலங்களாய்ச் சேர நாடு. சோணாடு. பாண்டி நாடு என வழங்கின. இவற்றை முறையே குடபுலம். குணபுலம். தென்புலம் என்று கூறுவது. பண்டை வழக்கு. சேரநாடு மேற்கு பகுதியில் உள்ளதால் குடபுலம் என்றும், சோழநாடு அதற்கு கிழக்கே உள்ளமையால் குணபுலம் என்றும் அவ்விரண்டுக்கும் தெற்கில் அமைந்தமையால் பாண்டி நாடு தென்புலம் என்றும் கூறப்பட்டன.

நம் பரத கண்டத்து அரசர்கள் சோம குலம், சூரிய குலம், அக்கினி குலம் எனும் மூன்று மரபுகளுள் ஒன்றுக்கு உரியவராகப் பெரும்பாலும் கூறப்படுவர். அம்முறையில், சோழ வேந்தர்கள் சூரியகுலத்தைச்சேர்ந்தவர்கள் என கூறப்படகின்றனர். சூரிய குலத்து ஆதி வேந்தர்களான மனு, இஷ்வாகு. மாந்தாதாசிபி, முசுகுந்தன் முதலியோரே இச்சோழர்களுக்கும் குல முன்னோர்கள். கலிங்கத்துப்பரணி, மூவருவா முதலிய தமிழ்நூல்களிலும் திருவாலங்காடு, கன்னியாகுமரி முதலிய இடங்களில் அகப்பட்ட சில செப்புச்சாஸனங்களிலும் இம் முன்னோர்களின் வமிசாவளியும் வரலாறுகளும் கூறப்பட்டுள்ளன.

குறிப்பாக சோழ மன்னர்கள் தமிழையும், அதன் பண்பாட்டையும் வளர்த்தவர்கள், கம்பன், ஒட்டகக்கூத்தர், சயங்கொண்டார் போன்ற பெரும் புலவர்கள் இவர்களால் போற்றி வளர்க்கப்பட்டவர்கள் கம்பராமாயாணம் கூட சோழமன்னனின் உந்துதலால் எழுதப் பட்டதே. அத்தோடு சோழர்கள் வட நாட்டார் தமிழகத்தைச் சிதைத்து விடாவண்ணம் எல்லைக் காவலர்களாக உழைத்தவர்கள். அவர்களில் கங்கைகொண்டசோழன் இராஜராஜசோழன், மனுநீதிகண்டசோழன், குலோத்தோங்கசோழன் எனப்பல காலத்துசோழ மன்னர்கள் இன்றும் நினைவு கூரப்படுகின்றார்கள். தமிழ் கூறும் நல்லுலகம் இவர்களை இன்றும் மறப்பதாக இல்லை.

நன்றி!

உமர்
தரம் :- 6E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**"பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க" என்று சொல்வார்கள் நம் முன்னோர்கள் அந்த பதினாறும் இதுதான்.**

1. புகழ்
2. கல்வி
3. வலிமை
4. வெற்றி
5. நன்மக்கள்
6. பொன் (பணம்)
7. நெல் (தானியம்)
8. நல்லூழ்
9. நுகர்ச்சி
10. அறிவு
11. அழகு
12. பொறுமை
13. இளமை
14. துணிவு
15. நோயின்மை
16. வாழ் நாள்

By:- N.M.J. Yoosuf
Grade :- 6T




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




S.லுஷாந்தன்
தரம் - 1D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



M. அஸீம்
தரம் - 4D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றி


கண்டி புனித அந்தோனியர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு நடாத்தும் 2009 ஆம் ஆண்டுக்கான கலைவிழாவாம் "சங்கே முழங்கு" விழா சிறப்பாக அரங்கேறவும், எம் கலைப்படைப்புக்களைச் சுமந்து வரும் மலர் வெளிவரவும் ஒத்துழைத்த சகலருக்கும் விழாக்குழு சார்பாக நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன்.

- இவ் விழாவை அலங்கரித்த பிரதம அதிதி சிறப்பு அதிதிகளுக்கும்.
- கல்லூரி மட்டத்தில் விழாவை அரங்கேற்ற அனுமதியளித்த கல்லூரி அதிபர் வணக்கத்துக்குரிய பிதா B.K.T.H. Rodrigo அவர்களுக்கும்.
- ஆரம்பப்பிரவுத் தலைவி அருட்சகோதரி Dulcie Farnando அவர்களுக்கும்.
- எம் சிந்தனைகளை சீர் செய்து நல் அறிவுரைகளை வழங்கி எமக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து, விழா சிறப்புற வழிகாட்டிய பொறுப்பாசிரியர், உட்பட சகல ஆசிரிய ஆசிரியைகளுக்கும்.
- விழாவிற்கு அடிநாதமான நிதியுதவி தந்துதவிய பெற்றோர்களுக்கும்,
- மலர் சிறப்புற வெளிவர அயராது உழைத்த இதழாசிரியர் உட்பட மலர் வெளியீட்டுக் குழுவினர்க்கும்,
- அழைப்பை ஏற்று விழாவை சிறப்பிக்க வருகை தந்த அனைவருக்கும்.
- மற்றும் உடலாலும், உள்ளத்தாலும், பொருளாலும் விழா சிறப்புற வேண்டும் என உழைத்த அனைத்த நல் உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அஸீஸ் மொகமட் பஸ்ரி
ஆரம்பப்பிரிவு
Grade:- 6T
தமிழ் இலக்கியமன்ற
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கலைமன்ற மாணவர்கள்



1st Raw (Left to Right)

A.J.M. Sajeed , M.R.M. Shaadir, W.A. Sana, T. Vithyasagar, A.M. Fazry, M.N.M. Alawi, M.M.M. Ahkam, S. Jevi,

2nd Row (Left to Right)

B. Kevin, Abishek, Sami, Rickashan Poul, Kevin, Danushan, R. Nidushan, Monishan, K. Raguram, Sri Sagaran, Inshaf , S. Harees, Poul Frazer, R. Madushan, Jelan Cristan, Antony Ray, Yusri,

3rd Row (Left to Right)

Jude desman, Umair, Saheed, A.M. Ashan, Yousuf Mark Stefan, P. Manokanthy, M.R.M. Risly, Prince Jerom, A.A. Adnil, N. S. Bewan, Krishant, Manfort, Nidarshan, Lewin, R. Ninoshant, S.M.M. Umair. Arshath Irshath, P. Avinash.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Complements from:*

# VETRIVEL BOOK SHOP

**No. 27, D.S. Senannayake Veediya,**
**Kandy.**

**Tel: 081-2205866**
**E-mail: thamu24@slt.net.lk**

*With Best Complements from:*



# IYNE CENTER

**Dealers in**
**Mother & Baby Care**
**and Ornaments.**

15, Prince Street,
Matale.
Tel: 066-2224796

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற வாழ்வு !

வருமானத்துடன் கூடிய வாழ்வு !!

சந்தோஷமான வாழ்வு !!!

இதுதான் DXN

- வீட்டிலிருந்தே முதலீடு எதுவும் இன்றி நீங்கள் செய்யும் அதே தொழிலுடன் அதி கூடிய வருமானத்தைப்பெற ஓர் இலகு வழி
- நோயின்றி, ஆரோக்கியமான வாழ்வைப்பெற ஓர் இலகு வழி

இவற்றிற்கு சனி, ஞாயிறு தினங்களில் காலை 9,30 மணி முதல் தோடர்பு கொள்க, அல்லது நேரில் வருக.

**DXN Stockist**

193/1, Madawala Road,
Katugastota.
(**Royal Pharmacy** க்கு முன்னால்.

T.P 060-2809557.
071-4395341.
077-7538773.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org